# அழகியல் துறைசார் பட்டதாரி மாணவர்களின் ஆய்வு அறிக்கைகளில் தகவல் அறிதிறனின் பயன்பாடு

# The usage of information literacy skills in the research projects of undergraduates of aesthetic studies

**B. பிரசாந்தன்**[1]
**B. Prashanthan**[1]

## Abstract

Information literacy has been identified as an important skill in the contemporary higher education environment. It is plays a vital role in the academic activities especially in research process of the undergraduates. Approriate usage of information literacy skills will improve the quality of undergartuates' research. Therefore this study focused the usage level of information literacy skills in undergraduates research projects at the Swami Vipulananda Institute of Aesthetic Studies, Eastern University, Sri Lanka. The study uses the survey research design and semi structured questions and observation as the data collection instruments. The study considered 75 undergraduates and their research projects in the academic year 2013/2014 as a sample. The information literacy skill was evaluated based on the six components which directly involve to the research report writing process. The study out put reveals that the undergraduates need more improvements in use of information literacy skill in their research report writing process.

**Keywords**: Information literacy, Aesthetics, Swami Vipulananda Institute of Aesthetic Studies

---

*[1]சிரேஷ்ட உதவிநூலகர், சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.*
*email: prashsg3y@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்**

தகவல் அறிதிறனானது சமகால உயர்கல்விச் சூழலில் பிரதானமான ஓர் விடயமாக காணப்படுகிறது. இத்திறனானது பட்டதாரி மாணவர்கள் தமது கல்வி சார் செயற்பாடுகளை இலகுவாக முன்னெடுப்பதற்கு அத்தியாவசியமானதாகக் காணப்படுகின்றது. குறிப்பாக ஆய்வுச் செயற்பாடுகளுக்கு இதன் பங்களிப்பு முக்கியமானதாகும். ஓர் ஆய்வாளர் சரியாக அல்லது நேர்த்தியாக தகவல் அறிதிறனை தனது ஆய்வினை எழுதும் செயற்பாட்டில் பயன்படுத்தியிருப்பாராயின் குறித்த அவ் ஆவணமானது/ ஆய்வானது கல்விப் பரப்பில் ஆய்வு நாகரிகத்தை பின்பற்றிய தரமுடைய ஆவணமாக நோக்கபபடுவதற்கான வாய்ப்பு அதிகமாகக் காணப்படுகின்றது . இப் பிண்ணனியில் இவ் ஆய்வானது கிழக்குப்பல்கலைக்கழக சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவக மாணவர்களின் ஆய்வு அறிக்கைகளில் தகவல் அறிதிறனின் பயன்பாட்டை மதிப்பிடுகின்றது. இவ் ஆய்வுக்காக அளவாய்வு முறை பயன்படுத்தப்பட்டதோடு ஆய்வுக் கருவிகளாக வினாக்கொத்து, அவதானம் போன்றன பயன்படுத்தப்பட்டன. மேலும் இவ் ஆய்வுகள் 2013 / 2014 கல்வியாண்டில் பதிவு செய்து ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பித்த மாணவர்களில் 75 மாணவர்களது ஆய்வறிக்கைகளும் அவ் மாணவர்களும் ஆய்வு மாதிரியாக கருத்திற் கொள்ளப்பட்டதுடன் ஆய்வறிக்கை எழுதும் செயற்பாட்டுடன் நேரடியாகத் தொடர்புடைய தகவல் அறிதிறனின் கூறுகளான ஆறு பிரதான உப திறன்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட்டுள்ளது. இவ் வகையில் ஆய்வுப் பெறுபேறானது மாணவர்களின் ஆய்வு அறிக்கைகளில் தகவல் அறிதிறனின் பயன்பாடானது மேலும் முன்னேற்றம் தேவைப்படும் மட்டத்தினையே பிரதிபலிக்கின்றது. எனவே அழகியல் துறை சார் பட்டதாரி மாணவர்களிடம் போதுமான அளவு திருப்தியான நிலையில் தகவல் அறிதிறன் சார்ந்த திறன் காணப்படவில்லை என்பது ஆய்வின் முடிவாக அமைகிறது.


**திறவுச்சொற்கள்** :- தகவல் அறிதிறன், அழகியல், சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்

## அறிமுகம்

மனித வாழ்க்கையில் தகவல் என்பதுமிக முக்கியமான தேவையாக காணப்படுகின்றது. நாம் இன்று தகவல் சமூகத்தில் (Information Society) அல்லது தகவல்கள் அதி வேகமாக வெளிவந்து கொண்டிருக்கும் யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். சமகால விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக பெரும் எண்ணிக்கையான தகவல்கள் ஒரு நிமிடத்தினுள் பல்வேறு வகைப்பட்ட தகவல் மூலங்கள் அல்லது தகவல் சாதனங்கள் ஊடாக வெளிவருகின்றன. அதே வேளை தகவல்கள் பல்வேறு வடிவங்களில்

(Formats) வெளிவருவதோடு எண்ணிக்கையில் அதிகமான சேவை முகவர்கள் தகவல்களை வழங்குவதற்காக காணப்படுகின்றனர். இப்பின்னனியில் தகவல்களை சரியாக அல்லது நேர்த்தியாக அணுகுதல், இனங்காணல், மதிப்பிடுதல் மற்றும் ஒழுங்கமைத்தல் மற்றும் வெளிப்படுத்தல் போன்றன ஒரு பிரஜைக்கு இன்றைய தகவல் சூழலில் இன்றியமையாததாகின்றது. Association of Collage and Research Library (2000) இன் கூற்றின் படி ''அளவுக்கதிகமான தகவல்கள் பிரயோகமானது மனித வாழ்க்கையில் பல்வேறு தடைகளுக்கு காரணமாகின்றது. குறிப்பாக மாணவ சமுதாயமானது விரைவாக வெளிவருகின்ற தகவல்களை கையாள விசேட திறன் உடையவர்களாக இருத்தல் வேண்டும் எனக் கூறிப்பிடுகின்றது. அதேவேளை ''தகவல் விரிவாக்கத்தின் விருத்தியின் விளைவாக சமூகமானது தகவல்களை இனங்காண்பதிலும், மதிப்பிடுவதிலும், பயன்படுத்துவதிலும் ஒழுங்கமைப்பதிலும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றது. இணைய வழி சேவையின் காரணமாக பல்வேறு விடயங்கள் தொடர்பில் உறுதி அற்ற தகவல்கள் கிடைப்பதை குறிப்பிடலாம் என (ரணவீர 2008) தனது ஆய்வில் குறிப்பிடுவதும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

உயர் கல்வித்துறையை பொறுத்தவரை நேர்த்தியான தகவல் என்பது இன்றியமையாததாகும். அதேவேளை இன்றைய உயர் கல்வி சூழலில் கற்றல் கற்பித்தல் முறையானது அதிலும் குறிப்பாக பல்கலைக்கழக கற்றல் கற்பித்தல் முறையானது மாணவர் மையக்கல்வியாகவே காணப்படுகின்றது. எனவே இம் முறையானது மாணவர்களை புலமைசார்ந்தவர்களாக (Intellectual Abilities) விருத்தி செய்வதற்கு ஊக்குவிப்பதோடு பல்வேறு தகவல் வளங்களை சுயமாக தேடி தமது கல்வி நடவடிக்கைக்கு பயன்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது. எனவே பல்கலைக்கழக கல்வி முறையில் நேர்த்தியான தகவலின் பயன்பாடானது மாணவர்களின் கல்வி மற்றும் ஆய்வு நடவடிக்கைகளுக்கு இன்றியமையாததாகின்றது.

இந்நிலையில் பெரும்பாலான இலங்கைப் பல்கலைக்கழகங்கள் தமது இளமானி பட்டத்திற்கான பாடவிதானத்தில் ஆய்வினை பிரதான செயற்பாடாக உள்வாங்கியுள்ள அதேவேளை இன் ஆய்வுச் செயற்பாடே அவர்களின் எதிர்கால பட்டபின் மற்றும் புலமைசார் ஆய்வு முயற்சிகளுக்கு அடிப்படையாகவும் அமைகின்றது. இவ் விடயம் சார்பாக Tom,Wenzel (nd) ''பட்டதாரி மாணவர்களின் ஆய்வுச் செயற்பாடுகள் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த துறை தொடர்பான புலமை சார்ந்த அல்லது புதிய உருவாக்கத்திற்கு பங்களிப்பு வழங்குவதாகும்'' என குறிப்பிட்டுள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத் தக்கதாகும். ஓர் ஆய்வானது பல்வேறு அடிப்படை படிநிலைகளை (Basic Steps) கொண்டுள்ளதன் அடிப்படையில் ஒவ்வொரு படிநிலைகளிலும் படிநிலைகளிடையேயும் தகவல் பயன்பாடு என்பது இன்றியமையாததாக

அமைந்துள்ளது. உதாரணமாக திட்டமிடல், இலக்கிய மீளாய்வு, முன்மொழிவு சமர்ப்பித்தல் பிரச்சினையை இனங்காணல் ஆய்வின் நோக்கத்தை அல்லது நோக்கங்களை வரையறுத்தல் தரவு சேகரிப்பு பகுப்பாய்வு வழங்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.இவ் ஒவ்வொரு நிலைகளிலும் ஆய்வு செயற்பாடானது இனம் காணுதல் அணுகுதல் ஆராய்தல் பிரயோகித்தல் போன்றவற்றினூடாக குறித்த விடயம் சார் அறிவினை விருத்தி செய்வதை முக்கிய இலக்காகக் கொண்டிருக்கின்றது. எனவே தான் கல்விசார் ஆய்வுச் செயற்பாடுகளில் சரியான தகவல் பயன்பாட்டின் அவசியம் முக்கியத்துவப்படுகிறது. எனினும் பெருகிவரும் அறிவுப் பிரவாகத்தின் விளைவாக எண்ணிறைந்த தகவல்கள் வெளிவருகின்ற நிலையில் தமது தேவைக்கு பொருத்தமான தகவல்களைத் தேர்தெடுப்பதில் மாணவர்கள் குறிப்பாக பட்டதாரி மாணவர்கள் பிரச்சினைக்கு முகங்கொடுக்கும் அதே வேளையில் அங்கீகரிக்கப்படாத அல்லது உத்தியோக பூர்வமற்ற தகவல்களை தேர்தெடுப்பதற்கான அதிகமான வாய்ப்புக்களும் காணப்படுவதால் சமகால உயர் கல்விச் தகவல் சூழல் பட்டதாரி மாணவர்களைப் பொறுத்தவரை சவாலாகவே காணப்படுகின்றது. ‘‘தகவல்கள் அபரிவிதமாக வெளியாகும் சூழலானது மாணவர்கள் தங்களது கல்வி செயற்பாடுகளுக்காக தகவல்களை தெரிவு செய்வதில் சிக்கல் நிலை தோற்றுவித்துள்ளது (மசுறுபா,2009) தனது ஆய்வில் குறிப்பிட்டுள்ளமையும் ‘‘சரியான தகவலை சரியான வடிவத்தில் சரியான நேரத்தில் பெறக்கூடியதாக இருக்கும் நிலையிலேயே எந்தவொரு சமுகத்தினதும் மேம்பாடு சாத்தியமாகும்.தகவல் வளங்கள் தகவல் தொடர்பாளர்கள் தகவல் பாவனையாளர்கள் என்ற மூன்றும் ஒன்றுடன் ஒன்று சரிவரப் பொருந்தும் போது தான் சரியான தகவல் சரியான நேரத்தில் சரியான நபரைச் சென்றடைதல் சாத்தியமாகிறது. உருவத்திலும் உள்ளடக்கத்திலும் வடிவத்திலும் எல்லையற்று பரந்து விரிந்திருக்கும் தகவல் பிரபஞ்சத்தை அணுகுவதில் பாவனையாளர்கள் எதிர் கொள்ளும் தடைகள் தகவல் உற்பத்தி சார்ந்த தடைகள் தகவல் செய்முறை சார்ந்த தடைகள் தகவல் பாவனை சார்ந்த தடைகள் என மூன்று நிலைப்பட்டவை’’(ஸ்ரீகாந்தலட்சுமி, 2019) தனது ஆய்வில் சுட்டிக்காட்டுகின்றமையும் மேற்படி விடயத்திற்கு வலுச்சேர்ப்பதாக அமைகின்றது. எனவே இத்தகைய சவாலானது அழகியற் கற்கைகள் துறையில் ஆய்வினை மேற்கொள்ளும் பட்டதாரி மாணவர்களுக்கும் பொதுவானதாகவும் பொருந்துவதாகவும் அமைகின்ற அதே வேளை தகவல் அறிதிறனின் பிரயோகத்தினுடாக பட்டதாரி மாணவர்கள் தாம் எதிர் கொள்ளும் தகவல் பயன்பாட்டுச் சவாலினை நிவர்த்திக்க கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.மேலும் ‘‘கடந்த சில வருடங்களாக தகவல் அறிதிறனானது சர்வதேச ரீதியில் உயர் கல்வி நிறுவன மாணவர்களுக்கான முக்கியமான திறனாக அடையாளப்படுத்தப்படுகின்றது. இத் திறனானது அனைத்துப் பல்கலைக்கழகங்களும் அடைய எதிர்பார்க்கின்ற இலக்கினை நோக்கி ஊக்குவிப்பதாக அமையலாம் எனவே தகவல் அறிதிறனானது கல்விசார் பாடவிதானங்களில் முக்கியமான விடயமாகக்

கருத்திற்கொள்ளப்படுகின்றது (புருஸ், 2000) தனது ஆய்விலும் குறிப்பிட்டுள்ளார். எனவே இவ் ஆய்வானது கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலாநந்த அழகியல் கற்கைகள் துறை மாணவர்களின் ஆய்வறிக்கைகளில் தகவல் அறிதிறனின் பயன்பாட்டினை மதிப்பிடுவதாக அமைகின்றது.

## தகவல் அறிதிறன்

ஒரு நபருக்கு தகவல் தேவைப்படுமிடத்து குறித்த நபர் தன்னுடைய தேவைக்கு தேவையான தகவலை இனம்கண்டு மதிப்பிட்டு வரையறுத்து பொருத்தமான சரியான தகவலைப் பயன்படுத்தும் திறனை தகவல் அறிதிறன் எனக் குறிப்பிடலாம். என Association of college and research Library, வரைவிலக்கணப்படுத்துகின்றது. ஆகவே தகவல் அறிதிறன் உடையவர் தனக்கு எப்போது தகவல் தேவை என்பதை அனுமானிக்கும் ஆற்றல் உடையவராக இருப்பதோடு தனக்கு வேண்டிய தகவல்களை இடம் குறித்து மதிப்பிட்டு சரியாக பயன்படுத்துபவராக இருப்பார். மேலும் ''தகவலை வெற்றிகரமாக பயன்படுத்துவதோடு குறிப்பாக பல்வேறு தகவல் சாதனங்களை அல்லது தகவல் வளங்களை அடிப்படையாகக் கொண்டு தகவல்களை தேடி அவற்றை பகுத்தறிந்து ஆராய்ந்து முடிவினை பெறுவதோடு தொடர்புடையதே தகவல் அறிதிறன் எனக் கருதலாம். இவ் வகையில் தங்களுக்கு தேவையான தகவலை அணுகுதல் அறிதல் பகுப்பாய்வு செய்தல் பயன்படுத்தல் போன்ற விடயங்களோடு தொடர்புடையதாக தகவல் அறிதிறன் காணப்படுகின்றது.

இத்தகைய பின்னணியில் இன்று பல்வேறு வகையான தகவல் அறிதிறன் மாதிரிகள் அல்லது கருத்தாக்கங்கள் (Information Literacy Models) உலகலாவியரீதியில் நேர்த்தியான தகவல் பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படுகின்றன. Big 6 plus model Pathway to knowledge Seven pillars Empowering 8 போன்றன இவற்றுன் சில முக்கியமான மாதிரிகளாகும். இம் மாதிரிகள் தமது நாடு மற்றும் பிரதேச சூழலிற்கேற்ப சற்று வேறுபட்டுக் காணப்படினும் இவற்றினுடைய அடிப்படை நோக்கம் ஒன்றேயாகும். அதாவது கல்விச்செயற்பாட்டில் சரியான தகவலை பெறுவதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு வழிகாட்டுவதாகும். தகவல் அறிதிறனின் இலக்குகளை அடைவதற்காக தகவல் விஞ்ஞானிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு வகையான மாதிரிகள் கற்பவர்களும் கற்பிப்பவர்களும் தமது கல்வி இலக்கினை அடைய வழிகாட்டுவனவாக அமைந்துள்ளன (ரணவீர, 2008) குறிப்பிடுவதும் இதனை மேலும் உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இவ்வகையில் தெற்காசிய நாடுகளுக்கு பொருத்தம் உடையதாக அதிலும் குறிப்பாக இலங்கையில் சர்வதேச நூலக சங்கங்களின் சமேளன்ம் மற்றும் கொழும்புப் பல்கலைக்கழத்தின் தேசிய நூலக தகவல் விஞ்ஞானங்களுக்கான நிறுவனம் என்பனவற்றின் அனுசரையில் நடார்த்தப்பட்ட செயலமர்வில்

உருவாக்கப்பட்ட Empowering 8 தகவல் அறிதிறன் மாதிரியானது இலங்கைச் சுழலுக்கு பொருத்தமுடையதாக நோக்கப்படுகின்றது இம் மாதிரியானது இனங்காணல் கண்டறிதல் தெரிவு செய்தல் ஒழுங்கமைத்தல் உருவாக்குதல் வழங்குதல் மதிப்பிடுதல் பிரயோகித்தல் ஆகிய 08 படி நிலைகளை அல்லது விடயங்களைக் கொண்டுள்ளதுடன் இப் படிநிலைக்கிடையே அவற்றை அடிப்படையாகக் கொண்டு பல்வேறுபட்ட உப திறன்கள் ஒவ்வொரு பிரிவிலும் காணப்படுகின்றன. எனினும் இவ் ஆய்வானது இம் மாதிரியினை மையப்படுதியதாக நகர்த்திச்செல்லப்படுகின்ற போதிலும் ஆய்வறிக்கை எழுதுவதற்கு அடிப்படையாக உள்ள பிரதான திறன்களுக்குள் காணப்படுகின்ற ஆய்வறிக்கை எழுதும் செயற்பாட்டோடு கூடுதலான தாக்கத்தினை செலுத்தக்கூடிய விடயங்களான பகுப்பாய்வு திறனின் கூறுகளாக காணப்படும் கலைச்சொற்களை இனம்காணல் (Identifying key words) ஆய்வினை மேற்கொள்வதற்கான ஒழுங்கமைப்பைத் தயார்படுத்தல் ( prepared format to write the research) அணுகுமுறை திறனின் (Locational skill) பல்வேறு தகவல் வளப்பயன்பாடு (Usage of Different information source) ஆக்கத்திறனின் (Creating skill) கூறுகளான கருத்து திருட்டு / புலமைத் திருட்டு தொடர்பான விழிப்புணர்வு (Awareness about plagirism) உசாத்துணைகளை பட்டியலை பயன்படுத்துவது தொடர்பான பரிச்சயம் (familiar with refernce and style) மீள் ஒழுங்கமைத்தலும் திருத்தமும் (Revised and Edit) ஆகிய ஆறு விடயங்கள் மாத்திரமே கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் அழகியல் கல்வியை தமது பட்டப் படிப்பிற்காக போதிக்கின்ற பல உயர் கல்வி நிறுவனங்கள் காணப்படுகின்ற போதிலும் இவ் ஆய்வானது கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தை மையப்படுத்தியதாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந் நிறுவனமானது 1982ம் ஆண்டு பிரதேச அபிவிருத்தி இந்து கலாச்சார அமைச்சினால் சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்டு 1978ம் ஆண்டு 24/ 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்திற்கு அமைவாக கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் அப் பல்கலைக்கழகத்தின் ஓர் நிறுவனமாக 2005ம் ஆண்டு இணைக்கப்பட்டதாகும். இந் நிறுவனமானது கர்நாடக சங்கீதம் நடனமும் நாடகமும் அரங்கியலும் மற்றும் கட்புல தொழில்நுட்பத் துறை எனும் மூன்று கல்வித் துறைகளைக் கொண்டுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

அழகியல் துறைசார் பட்டதாரி மாணவர்கள் தமது ஆய்வு அறிக்கைகளில் எந்தளவிற்கு தகவல் திறனை பயன்படுத்துகிறார்கள் என்பதை மதிப்பிடுவதோடு அவர்களின் தற்போதைய தகவல் அறிதிறனின் நிலையை

மேம்படுத்துவதற்கான சிபார்சுகளை முன்வைப்பதுமே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு பிரச்சினை

பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் ஆய்வினை தமது இளமாணி கல்வி நிகழ்ச்சித் திட்டத்தில் பிரதானமான ஓர் விடயமாக உள்வாங்கியுள்ள நிலையில் ஏனைய பட்டதாரி மாணவர்களைப் போலவே அழகியல் துறைசார் பட்டதாரி மாணவர்களும் தமது இறுதி ஆண்டில் ஆய்வில் ஈடுபடுகின்றனர். எனினும் பெரும்பாலான அழகியல் துறை சார் பட்டதாரி மாணவர்கள் ஆய்வினை மேற்கொள்ளும் போது தகவல்களை அணுகுவதிலும் ஒழுங்கமைப்பதிலும் பயன்படுத்துவதிலும் இடர்பாடு களுக்கு முகம் கொடுக்கின்றார்கள் இதற்கு தகவல் அறிதிறன் தொடர்பான அறிவு இல்லாமை அல்லது போதிய அளவு இல்லாமையே காரணமாக இருக்கலாம் ஆய்வாளர் அவதானத்தின் அடிப்படையில் கருதுகின்றார் வியசதுங்க மற்றும் மனாதுங்க(2010) தமது ஆய்வில் பட்டதாரி மாணவர்களின் பல்கலைக்கழகத்துக்கு உள்வாங்கப்படுவதற்கு முன்னரான கல்விச் சூழலானது அவர்கள் பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக தகவல் பயன்பாட்டு சுழலில் பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதற்கு காரணமாக இருக்கலாம் குறிப்பிடடுள்ளமையும் இங்கு கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும் எனவே ஆய்வறிக்கை எழுதும் போது அழகியல் துறைசார் பட்டதாரி மாணவர்கள் எதிர் கொள்ளும் தகவல்சார் பிரச்சினைகளுக்கு தகவல் அறிதிறனின் பயன்பாடு இன்மை அல்லது போதுமான அளவில் பிரயோகிக்கப்படாமை காரணமாக அமையலாம் என்பதே ஆய்வு பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது.

## ஆய்வின் முக்கியத்துவம்

இன்றைய கல்விப்புலத்தில் தகவல் அறிதிறனானது பிரபலமானதாக இருக்கும் அதேவேளை விரைவாக வளர்ச்சியடையும் தகவல் யுகத்தில் சரியான தகவலைப் பயன்படுத்தி தரமான ஆய்வினை மேற்கொள்வதற்கு இன்றியமையாத திறனாகவும் காணப்படுவதன் நிமித்தமும், மேலும் இதுவரை தகவல் அறிதிறன் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளில் இவ்விடயம் சார்ந்து அதாவது அழகியல் துறை பட்டதாரி மாணவர்கள் பற்றியே அவர்களிள் ஆய்வறிக்கையை தகவல் அறிதிறனுடன் தொடர்பு படுத்தியோ எவ்விதமான ஆய்வுகளும் மேற்கொள்ளப்படாத நிலையிலும் இவ் ஆய்வினை மேற்கொள்வது முக்கியமாகின்றது.மேலும் சமகாலத்தில் தகவல் அறிதிறன் தொடர்பான கற்கை அலகோ நிகழ்ச்சித் திட்டங்களோ அழகியல் துறை பாடவிதனத்தில் காணப்படவில்லை அத்துடன் இதனுடாக பட்டதாரி மாணவர்களின் தகவல் அற்திறன் சார்ந்த கருத்துக்களையும்

விழிப்புணர்வையும் அறிந்துகொள்ள முடியுமாதலால் இவ் ஆய்வு முக்கியத்துவமிக்கதாகின்றது.

**ஆய்வு முறையியல்**

அளவை சார் ஆய்வு முறையியலின் அடிப்படையில் அளவாய்வு (survey) முறையில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் 2013 / 2014 கல்வி ஆண்டில் பதிவு செய்திருந்த 163 மாணவர்கள் ஆய்வுக்குரிய குழுவாக இனங்காணப்பட்டு அவர்களில் 75 மாணவர்கள் எளிய எழுந்தமான மாதிரித்தெரிவு முறையில் ( Simple Random Sampling) ஆய்வு மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டதோடு அவர்களின் ஆய்வு அறிக்கைகளும் அவதானிப்புக்கு உட்படுத்தப்பட்டன.

ஆய்வுக் கருவியாக வினாக்கொத்து பிரயோகிக்கப்பட்டது. ஆய்வானது மாணவர்களின் ஆய்வு அறிக்கைகளில் ஆய்வறிக்கை எழுதும் செயற்பாட்டில் பிரதானமாக கருத்திற் கொள்ளவேண்டிய விடயங்களை மதிப்பிட்டுள்ளது. அதனடிப்படையில் கலைச்சொற்களை இனங்காணல், ஆய்வுக்குத் தயார்ப்படுத்திய முறை, தகவல் வளங்களின் பயன்பாடு, புலமைத்திருட்டிற்கான பரீட்சயம், உசாத்துணை ஒழுங்கமைப்புப் பாணி, மீள் ஒழுங்கமைத்தலும் திருத்தமும் என்பன பிரதான விடயங்களாக மதிப்பிட்டுள்ளது ஆய்வுத் தரவுகள் Likert இன் முறையின் அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டதோடு ஒவ்வொரு திறனுக்கும் சராசரி பெறுமதி கணிக்கப்பட்டது. சராசரி கணிக்கப்பட்ட Scale Value க்கு 5 வகையான அளவு நிலைகள் (score level) வழங்கப்பட்டு தரவுகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அட்டவணை 1 இதனை தெளிவுபடுத்துகின்றது.

அட்டவணை 1: பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்ட திறன்களுக்கு வழங்கப்பட்ட அளவு நிலை

| நிலை | அளவீடு |
|---|---|
| உச்ச நிலை உடன்பாடு (Strongly Agree) | 5 |
| உடன்பாடு ( Agree) | 4 |
| தீர்மானமின்மை (Undecided) | 3 |
| உடன்பாடு இன்மை (Diagree) | 2 |
| உச்ச நிலை உடன்பாடு இன்மை (Strongly Diagree) | 1 |

**ஆய்வு பகுப்பாய்வு**

ஆய்வுப் பெறுபேறுகள் அனைத்தும் ஒவ்வொரு பிரிவுகளாக பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டதுடன் இறுதியில் முழு ஆய்வறிக்கை தொடர்பான நிலையும் மதிப்பிடப்பட்டது.

**கலைச்சொற்களை இனங்காணல் (Identifying key words)**

கலைச்சொற்களை இனங்காணல் என்பது ஆய்வுச் செயற்பாட்டின் ஓர் பிரதான விடயமாக இனம் காணப்படுகின்றது. ஆய்வாளர் கலைச்சொற்களை தனது ஆய்வுத்தலைப்பில் இனம் காணும் திறனை கொண்டிருக்கும்போதே அவ் ஆய்வு தொடர்பான விடயங்களை அவரால் நேர்த்தியாகவும் இலகுவாகவும் முன்வைக்கக் கூடியதாக இருக்கும் இவ்வகையில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பட்டதாரி மாணவர்களின் அதிகமானவர்களுக்கு கலைச்சொற்களை இனங்காணும் முழுமையான திறன் காணப்பட்டிருக்கவில்லை என்பதை ஆய்வு பெறுபேறுகள் தெளிவுபடுத்துகின்றது அதாவது அண்ணளவாக 50% மாணவர்களிடம் இத்திறன் காணப்படவில்லை(உடன்பாடு இன்மை 47.66% உச்சநிலை உடன்பாடு இன்மை1.67%) என்பதுடன் சுமார் 36%( உச்ச நிலை உடன்பாடு 6.36%, உடன்பாடு 29.67%) மாணவர்களே இவ்விடயத்தில் தெளிவுடையவர்களாக உள்ளனர். அட்டவணை 02 இதனை தெளிவுபடுத்துகின்றது.

அட்டவணை 02: கலைச்சொற்களை இனங்காணல்

| நிலை | % |
|---|---|
| உச்ச நிலை உடன்பாடு (Strongly Agree) | 6.36% |
| உடன்பாடு ( Agree) | 29.67% |
| தீர்மானமின்மை (Undecided) | 14.64% |
| உடன்பாடு இன்மை (Disagree) | 47.66% |
| உச்ச நிலை உடன்பாடு இன்மை (Strongly Disagree) | 1.67% |

**ஆய்வினை மேற்கொள்வதற்கான ஒழுங்கமைப்பை தயார்படுத்தல் (Prepared a format to write the research)**

எந்தவொரு புலமைசார் செயல்பாட்டினை மேற்கொள்ளும் போதும் அதற்கான முன் ஆயத்த ஒழுங்குகளை வடிவமைத்துக் கொள்வது இன்றியமையாததாகும்.அவ் வகையில் பல்வேறுபடி நிலைகள் ஆய்வு பெறுபேறுகளின் அடிப்படையில் 3.33% உச்சநிலை உடன்பாட்டினையும்

மேலும் 41.67% உடன் பாட்டையும் இவ்விடயத்தில் கொண்டுள்ளனர். எனினும் 42.34% (உச்சநிலை உடன்பாடு இன்மை 13%, உடன்பாடு இன்மை 29.34%) தமது ஆய்வு செயற்பாடுகளில் இவ்வாறான செயற்பாடுகளை ஒழுங்கமைக்கப்பட்ட முறையைப் பின்பற்றி முன்னெடுப்பது இல்லை எனக் கருத்து தெரிவித்திருப்பதும் மேலும் 13.27% இவ்விடயத்தில் தீர்மானம் எடுக்க முடியாது இருப்பதும் ஆய்வினை மேற்கொள்வதற்கான ஒழுங்குமுறையான வடிவமைப்பை பிரயோகிக்கும் திறனை சவாலுக்கு உட்படுத்துவதாக உள்ளது எனலாம். அட்டவணை 03 இதனை தெளிவுபடுத்துகின்றது.

அட்டவணை 03: ஆய்வினை மேற்கொள்வதற்கான ஒழுங்கமைப்பைத் தயார்படுத்தல்

| நிலை | % |
|---|---|
| உச்ச நிலை உடன்பாடு (Strongly Agree) | 3.33% |
| உடன்பாடு ( Agree) | 41.06% |
| தீர்மானமின்மை (Undecided) | 13.27% |
| உடன்பாடு இன்மை (Disagree) | 29.34% |
| உச்ச நிலை உடன்பாடு இன்மை (Strongly Disagree) | 13% |

## பல்வேறு தகவல் வளங்களின் பயன்பாடு (Usage of Different Information Sources)

தகவல் அறிதிறனின் பிரதான பிரிவுகள் ஒன்றான அணுகுமுறைத் திறனின் (Locational Skill) ஆய்வுச் செயற்பாட்டோடு நேரடி தொடர்புடைய விடயமாக இனங் காணப்படுவது பல்வேறு தகவல் வளங்களின் பயன்பாடாகும் ஓர் ஆய்வினை வினைத்திறன் மிக்கதாக முன்னெடுப்பதற்கும் ஆய்வாளரின் பரந்துபட்ட தகவல் தேடலை இனம் காண்பதற்கும் நூல்கள் ஆய்விதழ்கள் இலத்திரனியல் தகவல் வளங்கள் போன்ற பல்வேறு தகவல் வயங்களின் பயன்பாடு இன்றியமையாததாகும். ஆய்வுப் பெறுபேறுகளின் படி ஆய்வுக்குட்படுத்தியவர்களில் கூடுதலானோர் (32%) பல்வேறு தகவல் வளங்களை தமது ஆய்வறிக்கை எழுதும் செயற்பாட்டின் போது பயன்படுத்தியுள்ள அதேவேளை மிகத் திருப்தியான நிலையினை பிரதிபலிக்கின்றனர். எவ்வாறாயினும் திருப்தி நிலையை பிரதிபலிக்கின்ற பட்டதாரி மாணவர்களுக்கு சமமான எண்ணிக்கையானோர் (உடன்பாடு இன்மை 40%, உச்சநிலை உடன்பாடு இன்மை 10%) தமது ஆய்வறிக்கைகளில் பல்வேறு வகைப்பட்ட தகவல் வளங்களை குறிப்பிடத்தக்களவு பயன்படுத்தாமையும் ஆய்வுப் பெறுபேறு

வெளிப்படுத்துகின்றது. இவ்வாறு கருத்துத் தெரிவித்தவர்களில் அநேகமானோர் ஏதாவது இரண்டு அல்லது ஒருவகை சார்ந்த தகவல் வளங்களை பயன்படுத்தியவர்களாகவே உள்ளனர். அட்டவணை 04 இதனைத் தெளிவுபடுத்துகின்றது.

அட்டவணை 04: பல்வேறு தகவல் வளங்களின்/ மூலங்களின் பயன்பாடு

| நிலை | % |
|---|---|
| உச்ச நிலை உடன்பாடு (Strongly Agree) | 18% |
| உடன்பாடு ( Agree) | 32% |
| தீர்மானமின்மை (Undecided) | 0% |
| உடன்பாடு இன்மை (Disagree) | 40% |
| உச்ச நிலை உடன்பாடு இன்மை (Strongly Disagree) | 10% |

## கருத்துத் திருட்டு / புலமைத் திருட்டு தொடர்பான பரிட்சயம் (Plagiarism)

இவ் ஆய்வில் பிரதானமாக கருத்தில் கொள்ளப்பட்ட முக்கியமாக விடயமாக மேற்குறித்த விடயம் அமைந்துள்ளது அதாவது எவ்வாறு பிறரது ஆக்கத்தினை தனது ஆக்கத்திற்கு நேரடியாக பயன்படுத்துவதிலிருந்து தவிர்த்துக்கொள்வது என்பதாகும். ஓர் ஆய்வாளன் இவ்விடயத்தில் பரிச்சயமானவராக இருப்பாராயின் வேறு ஆவணங்களிலிருந்து பெற்றுக்கொண்ட தகவலை / தகவல்களை நீதியான முறையில் தனது ஆய்வில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை அறிந்து இருப்பதோடு குறித்த ஆய்வுச் செயற்பாடானது புலமைசார் ஆய்வில் காத்திரமான இடத்தினையும் வகிக்க முடியும் இப்பின்னணியில் ஆய்வுக்குட்பட்டோரில் பெரும்பாலானவர்களின் கருத்துக்கள் (35.68% உச்ச நிலை உடன்பாடு இன்மை, 10% உடன்பாடு இன்மை 25.68%) தமக்கு மேற்படி விடயம் தொடர்பான பரிட்சயம் இல்லை என்பதாகவே அமைந்திருந்தது. குறிப்பாக 30% (உச்ச நிலை உடன்பாடு 10.5%, உடன்பாடு 18.5% ) குறைவானவர்களே பிறிதொருவரின் ஆக்கத்தினை / ஆக்கங்களை தமது ஆய்வில் எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பாக பரிட்சயம் உள்ளதாக கூறியிருந்தனர்.மேலும் இவ் விடயம் சார்ந்து விழிப்புணர்வு இல்லை என கருத்துரைத்தவர்களுக்கு சமனான எண்ணிக்கையானோர் (35.24%)தெளிவு இல்லாமல் இருப்பதும் ஆய்வுத் புலத்தில் காத்திரமான இடத்தினைப் பெற்றுள்ள கருத்துத் திருட்டு / புலமைத் திருட்டு தொடர்பான விடயத்தில் பட்டதாரி மாணவர்கள் ஆய்வறிக்கை எழுதும் போது பின்தங்கியிருப்பதையே ஆய்வின் பெறுபேறு வெளிப்படுத்திநிற்கின்றது எனலாம்.அட்டவணை 05 இதனை தெளிவுபடுத்துகின்றது.

அட்டவணை 05: கருத்துத் திருட்டு / புலமைத் திருட்டு தொடர்பான பரிட்சயம்

| நிலை | % |
|---|---|
| உச்ச நிலை உடன்பாடு (Strongly Agree) | 10.5% |
| உடன்பாடு ( Agree) | 18.5% |
| தீர்மானமின்மை (Undecided) | 35.24% |
| உடன்பாடு இன்மை (Disagree) | 25.68% |
| உச்ச நிலை உடன்பாடு இன்மை (Strongly Disagree) | 10% |

**உசாத்துணை விடயங்களுடன பரிட்சயம் (Familier with Referencing Style )**

குறித்தவொரு உசாத்துணைக்கு (Referencing Style) அமைவாக ஆய்வுக்காக பயன்படுத்திய ஆவணங்களை அட்டவணைப்படுத்தல் என்பது ஆய்வு தொடர்பான் நாகரீகத்தில் முக்கியமான ஒரு செயற்பாடாகும். ஒரு ஆய்வாளர் அல்லது குறித்து ஓர் ஆய்வு சரியான / நேர்த்தியான உசாத்துணைப் பட்டியலை இணைத்து இருக்குமாயின் /இணைத்திருப்பாராயின் குறித்த ஆய்வு நாகரீகத்தைக் கொண்டதாக ஆய்வுப் பரப்பில் நோக்கப்படும். அதேவேளை குறித்த ஆய்வில் பிரயோகிக்கப்பட்ட தகவல்களின் தன்மையையும் தரத்தினையும் வெளிக்காட்டுவதாக அமையும். ஆய்வு பகுப்பாய்வின் அடிப்படையில் 30% மாத்திரமே உசாத்துணை முறையில் பரீட்சயமானவர்களாக காணப்பட்டனர். 60% பட்டதாரி மாணவர்களுக்கு குறித்த ஒரு உசாத்துணை முறையில் முழுமையாக அனைத்து விடயங்களிலும் பரிட்சயம் காணப்படவில்லை என்பதை ஆய்வு பெறுபேறுகள் வெளிப்படுத்தியுள்ளன. அட்டவணை 06 இதனை தெளிவுபடுத்துகின்றது.

அட்டவணை 06: உசாத்துணை விடயங்களுடன் பரிட்சயம்

| நிலை | % |
|---|---|
| உச்ச நிலை உடன்பாடு (Strongly Agree) | 0% |
| உடன்பாடு (Agree) | 30% |
| தீர்மானமின்மை (Undecided) | 10% |
| உடன்பாடு இன்மை (Disagree) | 36.67% |
| உச்ச நிலை உடன்பாடு இன்மை (Strongly Disagree) | 23.33% |

**மீள் ஒழுங்கமைத்தலும் திருத்தமும் (Revised and Edit)**

குறித்த ஆய்வு தொடர்பான ஆவணத்தை வெளியிடுவதற்கோ அல்லது உத்தியோக பூர்வமாக சமர்ப்பிப்பதற்கோ முன்னர் குறித்த ஆவணத்தினை மீள் ஒழுங்கமைப்புச் செய்து திருத்தம் செய்வதானது குறித்த ஆவணத்தின்/ ஆய்வின் தரத்தினை பேணுவதற்கு கூடிய வாய்ப்பினை வழங்குகின்றது. எனவேதான் தகவல் அறிதிறனின் ஆக்கத்திறனின் கீழ் பிரதானமான செயற்பாடாக மீள் ஒழுங்கமைத்தலும் திருத்தமும் குறிப்பிடப்படுகின்றன. இச் செயற்பாடுகளின் ஊடாக தவறுகள் திருத்தப்படுவதுடன் போலியான அல்லது உண்மைக்கு புறம்பான விடயங்கள் தவிர்க்கப்படுவதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. இவ்வகையில் ஆய்விற்க்குட்படுத்திய அழகியல்துறை பட்டதாரி மாணவர்களில் 53.33% களிடம் இத்திறனானது காணப்படுவதாக பெறுபேறுகள் வெளிக்காட்டியுள்ளது. இது திருப்தி நிலையினை பிரதிபலிக்கின்றமை சிறப்பான விடயமாக நோக்கப்படினும் குறிப்பிடத்தக்களவினர் (உடன்பாடு இன்மை 30% ) இதனை பின்பற்றாது இருப்பதும் அவதானத்திற்குறியதாகும். குறிப்பாக புலமைசார் விடயம் என்ற வகையில் ஆய்வு அறிக்கை ஒன்றில் இத்தகைய மீளஒழுங்கமைத்தலும் செம்மையாக்கல் /திருதியமைத்தல் போன்ற விடயங்கள் உச்சநிலையில் பிரயோகிக்கப்படும் போதே குறித்த ஆவணம் / ஆய்வு முழு நிறைவானதாக அமைய முடியும். அட்டவணை 07 இதனை தெளிவுபடுத்துகின்றது.

அட்டவணை 07: திருத்தமும் ஒழுங்கமைத்தலும் தொடர்பான திறன்

| நிலை | % |
|---|---|
| உச்ச நிலை உடன்பாடு (Strongly Agree) | 20% |
| உடன்பாடு ( Agree) | 33.33% |
| தீர்மானமின்மை (Undecided) | 16.67% |
| உடன்பாடு இன்மை (Disagree) | 30% |
| உச்ச நிலை உடன்பாடு இன்மை (Strongly Disagree) | 0% |

**முடிவுரை**

இவ் ஆய்வின் முடிவின் அடிப்படையில் அழகியல் துறை பட்டதாரி மாணவர்கள் தமது ஆய்வறிக்கைகளில் தகவல் அறிதிறனை பயன்படுத்தும் சராசரி நிலையானது மேலும் முன்னேற்றம் தேவைப்படும் மட்டத்தினையே பிரதிபலிக்கின்றது. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட தகவல் அறிதிறனின் பிரதான ஆறு விடயங்களுள் மீள்பார்வையும் செம்மையாக்கலும் தவிர்ந்த ஏனைய அனைத்து விடயங்களும் திருப்தி நிலையில் காணப்படவில்லை.

அதேவேளை மீள்பார்வையும் செம்மையாக்கலும் திருப்தி நிலையை பிரதிபலித்தாலும் ஓர் கல்விசார் புலமைசார் செயற்பாடு என்ற வகையில் இவ்விடயம் ஆய்வறிக்கைகளில் மேலும் கூடிய சராசரி மட்டத்தில் காணப்படுவது சிறப்பானதாகும். அத்தோடு பல்வேறு தகவல் வளங்களின் பயன்பாடு எனும் விடயமானது திருப்தி நிலை அடைவு மட்ட சராசரி பெறுமானமாக கணிக்கப்பட்ட 50% இற்கு அண்மித்த 49% என்ற சராசரியை பிரதிபலித்துள்ளதாயினும் திருப்தி நிலையோ அல்லது அதற்கு மேலான நிலையையோ பிரதிபலிக்கவில்லை. எனவே திருப்தியற்ற நிலையில் காணப்படுகின்ற் திறன்கள் சரியான விதத்தில் அழகியல் துறை பட்டதாரி மாணவர்களிடையே விருத்தி செய்யப்பட வேண்டும்.

**பரிந்துரைகள்**

இவ்வகையில் நிறுவனமானது குறுகியகால நிகழ்ச்சித் திட்டங்களையும் பயிற்சிப் பட்டறைகளையும் குறித்த விடயங்கள் தொடர்பாக ஒழுங்குபடுத்தி மாணவர்கள் மத்தியில் மேற்படி திறன்களை பரிட்சயம் உடைய தாக்குவதன் மூலம் தற்போதைய நிலையிலிருந்து உயர்நிலைக்கு வழிப்படுத்த கூடியதாக அமையலாம். அதேவேளை தற்போது நடைமுறையில் உள்ள ஆய்வு முறையியல் பாடத்தினூடாக மேற்படி திறன்கள் தொடர்பான அறிவினை பயிற்சியினை வழங்குவதுடன் ஊடாகவும் தற்போதைய நிலையினை உயர்த்த கூடியதாக இருக்கும் என இவ் ஆய்வு சிபார்சு செய்கின்றது.

## References:

Association of College and Research Library, (2000). Information Liretacy Competency Standards for Higher Education. Retrieved from http://www.acrl.org/ala/ngres/divs/acrl/standards.

Bruce, Christine, (2000). Information Literacy program and research: an International. Review. *Australian Library Journal,* 49(3), 209-218 (as cited in Hindagolla.2011) provided a study on User Perception towards the user Education program Conducted by Universities Libraries.

Likert, A. (1932). A Teaching for the measument of attitudes. Archieves of psychology (as cihed in Oppenheim, N.2000). Quessionnaire design.

Mashroofa, M.M. (2009). New vistas of Information Literacy Education a case from South Eastern University. *Journal of the University Librarians Association of Sri Lanka*, 13, 23-36.

Ranaweera, Prasanna, (2008). Importance of Information Literacy skills for an Information Literacy Society. NACLIS Conference.

Tom, Wenzel, (nd). Definition of Research, Department of Chemistry Bate College. Retried from www.bates.edu/prebuilt/Cham-definition.pdf

Wijethuga, P. & Manatuge,K.S.(2010).Transforming undergraduate into lifelong learing through information literacy with special reference to first year undergraguates of the faculty of Low .University of Colombo. Paper presented at SLHEE Conference, 2010

ஸ்ரீகாந்தலட்சுமி, அருளானந்தம், (2019). இலங்கையில் இடைநிலைக்கல்விப் பாடநூல்களில் தகவல் அறிதிறன் கூறுகள்:விஞ்ஞான பாடநூலை மையப்படுத்திய ஆய்வு,*இலங்கை நூலக நோக்கு*,தொ.33,ப.53-68